தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-12-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் காய்கறிகளில் மாறிவரும் காலநிலைக்கேற்ப உணவுத் தன்னிறைவு என்பது பற்றிய தேசிய கருத்தரங்கத்தினை

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், ‘‘காய்கறிகளில் மாறிவரும் காலநிலைக்கேற்ப உணவுத் தன்னிறைவு என்பது பற்றிய தேசிய கருத்தரங்கத்தினை டிசம்பர் மாதம் 6 தேதி முதல் 9 ம் தேதி நடத்த உள்ளது . இதில் தேசிய அளவிலான வேளாண் விஞ்ஞானிகள் பங்களிக்க உள்ளனர். அவர்கள் காய்கறிகளில் பயிர்பெருக்கம், இடுபொருள் மேலாண்மை, உயர்தொழில் நட்பங்கள், அங்கக காய்கறி உற்பத்தி, விதை உற்பத்தி, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, அறுவடை பயிர்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றி தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பிக்க உள்ளனர்.

இக்கருத்தரங்கில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் புது டில்லியை சேர்ந்த தோட்டக்கலை துணை இயக்குநர் தலைவர் முனைவர் ஏ.கே. சிங் அவர்கள் தலைமை தாங்கவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் விழாவினை துவக்கி வைக்கவும் இசைந்துள்ளனர்.

தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் எம். ஜவஹர்லால் அவர்கள் வரவேற்புரை வழங்க, தமிழ்நாடு தோட்டக்கலைக் இயக்குநர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் ஐஏஸ், மற்றும் தோட்டக்கலை ஆணையர், புதுடில்லி, முனைவர் பிஎன்ஸ் மூர்த்தி மற்றும் முனைவர். கிருஷ்ணகுமார், தலைவர், பண்ணாட்டு பையோ வர்சிட்டி அவர்களும் சிறப்புரையாற்ற உள்ளார்கள். விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரின் நேர்காணல் டிசம்பர் மாதம் 8-12-02017 அன்று நடக்க உள்ளது. வேளாண்மை பல்கலைக் கழகத்தின் காய்கறி பயிர்கள் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் த. ஆறுமுகம் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்த உள்ளார்.

மக்கள் தொடர்பு அலுவலர்